

விழுப்புரம் தெற்கு மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுக்குட்பட்ட காணை மத்திய ஒன்றிய கழக செயலாளர் ஆர்.பி.முருகனின் தந்தை ஆர்.பார்த்தசாரதி உடல் நலக்குறைவால் (3.12.2025) அன்று மறைவு எய்தினார். தகவல் அறிந்து துணைப் பொதுச்செயலாளர் க.பொன்முடி, மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி, அன்னியூர் சிவா எம்.எல்.ஏ. உள்ளிட்டோர் நேரில் சென்று மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

### மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில்

# 27 லட்சம் தொழிலாளர்களை நீக்குவதா?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் ஒத்தி வைப்புத் தீர்மானம்!

புதுடெல்லி, டிச.6-

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் (MGNREGA) 27 லட்சம் தொழிலாளர்கள் நீக்கப்பட்டதைக் கண்டித்து ஒன்றிய அரசின் அவசரக் கவனத்தைக் கோரி நாடாளுமன்ற மக்களவையில் ஒத்தி வைக்கும் தீர்மானத்தை வேலூர் மக்களவை உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் முன் வைத்தார்.



வேலூர் மக்களவை உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், மக்களவையில் விதி 332ன் கீழ் நாடாளுமன்ற மக்களவை நடவடிக்கையை ஒத்திவைக்கும் தீர்மானம் கோரிக்கை ஒன்றை முன் வைத்தார்.

10 அக்டோபர் முதல் 14 நவம்பர் 2025 வரையிலான 35 நாட்களில் நாடு முழுவதும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் (MGNREGA) தரவுத்தளத்திலிருந்து 27 லட்சம் தொழிலாளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தில் மட்டும் 30,529 தொழிலாளர்கள் எந்த முன் அறிவிப்பும் இல்லாமல் நீக்கப்பட்டுள்ளனர்.

இது eKYC, ஆதார் இணைப்பு, NMMS app போன்ற கட்டாய டிஜிட்டல் நடைமுறைகளால் உருவான பேரழிவு என எம்.பி குறிப்பிட்டார்.

இதன் பாதிப்புகள்: இந்த நடவடிக்கை காரணமாக பெண்கள் முதியோர் மற்றும் விதவைகள், ஸ்மார்ட் போன்/இணைய வசதி இல்லாத கிராம மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**முக்கிய கோரிக்கைகள்:**

நீக்கப்பட்ட அனைத்து ஜாப்கார்டுகளையும் உடனடியாக மீண்டும் செயல்படுத்துதல், தொலைதூர கிராமங்களில் டிஜிட்டல் கட்டாயங்களை நிறுத்துதல், தொழிலாளர்களின் கூலித்தொகை தாமதமின்றி வழங்குதல் "டிஜிட்டல் இந்தியா" என்ற பெயரில் ஏழைகளை டிஜிட்டலாக அழிக்க முடியாது" என கதிர் ஆனந்த் எம்.பி வலியுறுத்தினார்.

### மாவட்ட செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ப.ஸ்ரீதர்ராஜன் தலைமை!

# திரு.வி.க. நகர் தெற்கு பகுதியில் மாபெரும் இரத்ததான முகாம்!

## கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் க.பிரபு துவக்கி வைக்கிறார்!

சென்னை, டிச.6-

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில், திரு.வி.க.நகர் தெற்கு பகுதியில், மனிதநேய உதய நாளை முன்னிட்டு - மாபெரும் இரத்ததான முகாமை - கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் க.பிரபு துவக்கி வைக்கிறார்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில், திரு.வி.க.நகர் தெற்கு பகுதியில், மனிதநேய உதய நாளை முன்னிட்டு "உதயம் - 23", உணர்வோடு ஓடும் உதிரம்! ஒளியோடு தோன்றும் உதயம்! எனும் தலைப்பில், மாபெரும் இரத்ததான முகாம் 07/12/25 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.30 மணியளவில், சென்னை, குயப்பேட்டை, வெங்கடாத்திரி தெரு, சமூகநலக்கூடத்தில் நடைபெறுகிறது.

இந்த இரத்ததான முகாமில், திரு.வி.க.நகர் தெற்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் ப.ஸ்ரீதர் ராஜன் தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, எம்.சாமிகண்ணு, செ.தமிழ் வேந்தன், வானவில் விஜய், இசட்.ஆசாத் எம்.சி, புனிதவதி எத்திராசன் எம்.சி, சரிதாமகேஷ்குமார் எம்.சி, டி.லோகேஷ், நா.துலுக்காணம், பி.ஜெ.துளசிங்கம், லயன் பி.உதயசங்கர், எம்.பெரோஸ்கான், இரா.வீராமணி, கா.ராஜ்முகமது, தமிழசெல்வி சசிகுமார் எம்.சி, ரமணிலோகேஷ் எம்.சி, மு.சரவணன் எம்.சி, எஸ்.வெங்கடேசன், எம்.தமீம், தே.சுரேஷ்குமார் (எ) பொல்லு சுரேஷ், வி.வெங்கடேசன், பா.பி.தாஸ் முன்னிலை வகிக்கின்றனர்.

ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், க.வினோத், ஜி.ஜெ.பிரபு, எஸ்.தனசேகர், ஆர்.டி. சங்கர் நானா, ஜெ.மணிகண்டன், க.சரவணன், தே.நாராயணன், எஸ்.ஆர்.மனோஜ்சேகரன், ஐ.கே.ரவிராஜ், ச.செல்வக்குமார், வா.பிரதாப் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் இரத்ததான முகாமை - கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் க.பிரபு துவக்கி வைக்கிறார்.

மேலும் இந்த ரத்ததான முகாமில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியாராஜன், டாக்டர்.கலாநிதிவீராசாமி எம்.சி, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, தண்டலம் என். கிருஷ்ணமூர்த்தி, ப.ரங்கநாதன், கே.எஸ்.இரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, கே.சந்துரு, சி.மகேஷ்குமார், பி.கேமூர்த்தி, மண்டல குழு தலைவர்: : கூ. பீ.ஜெயின் எம்.சி., சொ.வேலு எம்.சி., ஸ்ரீராமுலு எம்.சி., டாக்டர் ஜி.சாந்தகுமாரி எம்.சி., பகுதி கழக செயலாளர்கள்: ஐ.சி.எப். வ.முரளிதரன் எ.நாகராசன் வே.வாசு எஸ்.முரளி எஸ்.இராஜசேகர் வி.சுதாகர், டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.டி.ஆர்.நாகராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி டி.வி. செம்மொழி எம்.சி., ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி., எஸ்.பன்னீர்செல்வம் சாவித்திரிவீரராகவன், எம்.இப்ராஹிம் கனி அ.நிர்மலாதேவி டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா எம்.சி., இரா.கலைச்செல்வி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்: எல்பிஎப்.மோகன் துரை கண்ணன் சுதாதீனதயாளன் எம்.சி., ராஜேஸ்வரிஸ்ரீதர் எம்.சி., ஜி.வி.நாகவள்ளி எம்.சி., பி.விஜயகுமார் எம்.விநாயகம், க.பா.பிரதீப்குமார் ம.அசோக்குமார் கு.கிருஷ்ணமூர்த்தி எல்.சம்பத்குமார் து.ஆயிரம் ஆர்.எஸ்.சித்திக் கே.கோகுல் ர.கலைவேந்தன், திரு.வி.க.நகர் தெற்கு வடக்கு பகுதி கழக நிர்வாகிகள்: அ.கோவிந்தன் பி.சுகுமார் த.கருணாநிதி வனஜா சண்முகம் அ.கருணாநிதி தில்லைகதிரவன், பெரம்பூர்.ஆர்.ராஜன் புல்லட்கி.ரமேஷ் பி.புவனவதி கினார்ஆறுமுகம். திரு.வி.க.நகர் வடக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் : மா.ருத்ரமூர்த்தி ஜி.கிருஷ்ணகுமார் எஸ்.புஷ்பராஜ் எம்.ஏடீக்கா எம்.இசட். அபோய் பரிமளாசுரேஷ்பாபு, திரு.வி.க.நகர் தெற்கு வடக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள்: வே.து.தாமரைச்செல்வம் எல்.சுப்பிரமணி அ.கதிரவன் வெல்டிங் எஸ்.பாபு இரா.புருஷோ த்தமன், பா.பாபுமனேகரன் கி.நாகலிங்கம் நெல்லை மா.முத்தையா எச்.திவாகர் அ.விஜயகுமார் கே.என்.ஸ்வீட்பாபு வி.ஜெகன்நாதன் எம்.விஜயகுமார் வ.நாமதேவன் டி.ராஜூ க.எழிலன் எம்.துரைசாமி ஜெ.அண்ணாதுரை பி.இளஞ்செழியன் பி.சத்தீஷ் ஆர்.ராஜராஜன் டி.சீனிவாசன் பிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர் எஸ்.சசிகுமார் நன்றி கூறுகிறார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வீரா (எ) வி.வீரமணி
### டிசம்பர் 6 (2020)



கழகக் குடும்பத்தைச் சேர்ந்த இவர், தனது இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

வடசென்னை மாவட்டத்தில், பகுதிப் பிரதிநிதியாகவும், வட்டக் கழகச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# நீ சமூகநீதியின் அரண்! சனாதனத்தின் முரண்!



உதயநிதி
இது பெயர் அல்ல!
ஒரு சகாப்தம்!
ஒரு இயக்கம்!

நீ
நீதிக்கட்சியின் நீட்சி!
சுயமரியாதை இயக்கத்தின் சுடரொளி!
தி.மு.கழகத்தின் வைப்புநிதி!
இளைய சமுதாயத்தின் எழுச்சி நிதி!

நீ தொட்ட இடம் எல்லாம்
துலங்கும், துளிர்க்கும்
ஒருசிலர்க்கு மட்டும்
சுட்டுவிடும், நெருப்பாய் பட்டுவிடும்!.

பெரியாரின் பேரன் நீ
அதனால் தான்
எங்கு அடித்தால் எதிரி வீழ்வான்
என இடம் பார்த்து அடிக்கின்றாய்!.

அண்ணாவின் வழித்தோன்றல் நீ!
கொள்கைச் சமரில்
உனக்கு சலிப்பே வருவதில்லை.

கலைஞரின் பேரன் நீ
உன் சமயோசித பேச்சிலும் சரி1,
உரையிலும் சரி!
அடிக்கின்ற அடியிலும் சரி!
உடுக்கின்ற உடையான கருப்பிலும் சரி
நக்கலிலும் சரி, நையாண்டி பேச்சிலும் சரி
சபாஷ்!
நீ முழுவதுமாய்
கலைஞரின் பேரன் தான்!

சமரசமில்லா போராளியே!
படைமுகத்து பெருவீரனே!
நீ சமூகநீதியின் அரண்!
சனாதனத்தின் முரண்!

இயக்கத்தின் வேர்களுக்கு பொற்கிழி.
இளைஞர்கள் படைநடத்த, பயிற்சி பெற
பாசறைக்கூட்டம்.
எத்தனை சிந்தனைகள் உனக்கு
இனம் காக்க! இயக்கம் காக்க!.

கலைஞரின் பேரனே!
தலைவர் ஸ்டாலினின் தவப்புதல்வனே!
விலைபோகா வீரம் நீ!
வீழ்ந்து விடா மானம் நீ
எந்த சுழலிலும், சூழலிலும்
திராவிட இயக்க கொள்கைகளை
விட்டுக்கொடுக்காத விவேகம் நீ

கழகத்தின் கொள்கை கருவூலமே!
இளைஞர்களுக்கு மட்டும் அல்ல
இயக்கத்தின். இனத்தின்
அடுத்த தலைமுறைக்கும் தலைமையேற்க
தகுதியானவன் நீ மட்டும் தான்!

2026 தேர்தல்
ஆட்சிக்கான தேர்தல் மட்டும் அல்ல
நம் இயக்கம் காக்கும் நேர்தல்
நம் இனம் காக்கும் தேர்தல்
நம் மொழி காக்கும் தேர்தல்
நம் அடுத்த சந்ததியைக் காக்கும் தேர்தல்

உதயநிதியே!
எங்கள் இதயநிதியே!
பாசிசத்தின் பகையே!
பகுத்தறிவு படைக்கலனே!
சூல்கொண்ட பகையை,
வேல் கொண்டு வீழ்த்தப்புறப்படு,

விண்ணை முட்ட கொட்டட்டும் போர் முரசு!
நீளட்டும் கூர் வேல்கள் பகையை நோக்கி!
உயர்த்தட்டும் உன் தோள்கள் வாளைஏந்தி!
அமைத்திடுவாய் சக்கர வியூகம்!.

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின்
உடன்பிறப்புகளே!
அணிவகுப்போம்!.
ஆர்ப்பரிப்போம்!.
வெற்றி கொள்வோம்!



**இராசா அருண்மொழி**
மாவட்ட துணைச் செயலாளர்
விருதுநகர் தெற்கு மாவட்ட தி.மு.க.
துணைத் தலைவர் - தமிழ்நாடு அரசின்
சீர்மரபினர் நல வாரியம்

# திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் அவசர ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!



திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் இன்று (06-12-2025 - சனிக்கிழமை) மாலை 3 மணி அளவில் RM Guest House, காக்களூரில் மாவட்ட அவைத் தலைவர் மா. இராஜி தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் திருவள்ளூர் மேற்கு ஒன்றிய செயலாளர் ஆர்.ஜெயசீலன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

மேலும் இக்கூட்டத்தில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினரும், தலைமை செயற்குழு உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், பூவிருந்தவல்லி தொகுதி பார்வையாளர் PTC செல்வராஜ், ஆவடி தொகுதி பார்வையாளர் நிவேதா ஜெசிகா, மாநில இளைஞரணி துணைச்செயலாளர் பிரபு கஜேந்திரன், மாநில சிறுபான்மை நல உரிமை பிரிவு இணை செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார் பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், எம்.முத்தமிழ்செல்வன், காஞ்சனா சுதாகர், வி.குமார், ஜெ.மகாதேவன், எஸ்.சங்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

அது சமயம் ஆலோசனை கூட்டத்திற்கு மாநகர, ஒன்றி,ய நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி இந்நாள் - முன்னாள் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், இளைஞர் அணியை சேர்ந்த மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : வருகின்ற 14.12.2025 அன்று திருவண்ணாமலையில் நடைபெறவுள்ள வடக்கு மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு குறித்து.

**அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்,**
செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.